# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


**ஆணை நாள் 02.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 5251/விசாரணை/E/2024**

1) இவ்வாணையத்தின் 12.02.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இவ்வாணையத்திற்கு 21.05,2026 நாளிட்டு அனுப்பியுள்ள அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுபடி, மனுதாரருக்கு, 11.05.2026 மற்றும் 15.06.2026 ஆகிய தேதிகளில் கள ஆய்வு செய்வதற்கு வருமாறு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டதாகவும், ஆனால் மேற்படி இரு தேதிகளிலும், மனுதாரர் கள ஆய்வு செய்ய வரவில்லை என்றும், மனுதாரர் கோரியபடி முசிறி வட்டம், சேருகுடி கிராமம், UDR-க்கு முந்தைய வரைபட ஆவணம் தங்கள் அலுவலக பராமரிப்பில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டு, மேற்படி அழைப்பாணைகளின் நகல்களும், அவற்றை மனுதாரர் பெற்றுக் கொண்டு வழங்கிய ஒப்புகை அட்டை மற்றும் தபால் துறை இணையதள பக்கத்திலுள்ள பதிவின் நகல்களும் இணைக்கப்பட்டிருந்தன.

2) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், சட்டப்பிரிவு 2(j)-ன் கீழ் ஆவணங்களை கள ஆய்வு செய்ய மனுதாரருக்கு வழங்கப்பட்ட இரு வாய்ப்புகளையும் மனுதாரர் பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டார் என்பதை பதிவு செய்கிறது. எனினும், வேறொரு நாளில், மனுதாரர் களஆய்வு செய்ய வரும்பட்சத்தில், அதற்கான வாய்ப்பை மனுதாரருக்கு வழங்க வேண்டுமென பொதுத் தகவல் அலுவலருக்கு தெரிவித்து, இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 5251/விசாரணை/E/2024**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
முசிறி வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது),
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திரு க.சிவசஙகர்,
எண்.4/436, பாத்திமாபுரம், 4வது தெரு,
வடக்கு காட்டூர்,
திருச்சிராப்பள்ளி - 621 211

Copy to File
CR/PA